**இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2025**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் (“பல்கலைக்கழகம்”) 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது

தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 7.4 | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி நடவடிக்கை | பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளருக்கு உத்தியோகபூர்வ இல்லம் கையளிக்கும் போது அல்லது அதன் பின்னர் நீர், மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டுமென அறிவிக்கப் படாமையினாலும் மற்றும் அது | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவு | எடுப்பதாயின் அதற்காக திறைசேரியில் இருந்து முறையான அங்கீகாரம் பெறவேண்டி இருந்த போதிலும் அவ்வாறு முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 2023 ஒக்தோபர் முதல் 2024 திசெம்பர் வரையான காலப் பகுதியில் இருந்து பதிவாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 320,134 நீர், மின்சாரப் பட்டியல் கட்டணம் 2025 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | வரை உத்தியோக பூர்வ இல்லத்தை பயன்படுத்திய பதிவாளரிடம் இருந்து நீர், மின்சாரக் கட்டணம் அறவிடப்படாமையாலும், உத்தியோகபூர்வ இல்லம் அல்லது விடுதிகளில் வசிக்கின்ற எந்த ஒரு உத்தியோகத்தரிடம் இருந்தும் நீர், மின்சாரக் கட்டணம் தனித் தனியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் முன்னாள் பதிவாளரின் உத்தியோகபூர்வ இல்லம் பயன்படுத்தப்பட்ட 2023 ஒக்தேபார் 11 ஆம் திகதி முதல் 2025 சனவரி 11 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்காக நீர், மின்சாரக் கட்டணத்தை அறவிடாமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் 2025 ஆகஸ்ட் மாதம் முதல் உத்தியோகபூர்வ இல்லம் அல்லது விடுதிகளில் வசிக்கின்ற சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் நீர், மின்சாரக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்துவர்க ளினால் நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2022 சனவரி 03 ஆந் திகதிய இலக்கம் 01/2022 என்ற பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் i ஆம் பிரிவு | கணகாய்வுத் திகதியான 2026 ஏப்ரல் 20 வரையிலும் 2025 ஆம் ஆண்டுக்குரிய நூலக புத்தகங்களின் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் 2024 இன் நூலக புத்தகங்களின் மெய்மையாய்வின் பிரகாரம் 213 நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்தது. | (i) வருடாந்த மதிப்பீட்டிற்காக ஆளுகைச் சபையின் அங்கீகாரம் உரித்தாகியதில் இருந்து இறுதி அறிக்கை ஆளுகைச் சபைக்கு அனுப்பப்பட்டு பரிந்துரை அமுல்படுத்துதலை அங்கீகரிப்பதற்கு 13 மாதங்களுக்கும் 15 மாதங்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தது. | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த நூலக புத்தகங்களின் மெய்மையாய்வை மேற்கொண்டு தொலைந்த நூலகப் புத்தகங்கள் இனங்காணப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | (ii) | பயன்பாட்டுப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாது இருந்த நூலகப் புத்தகங்கள் பயன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதில் அநேக எண்ணிக்கையிலான புத்தகங்களை முறையான பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமையால் நூலகரால் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அவ்வாறான சந்தர்ப்பங்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 158,266,028 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,531,611 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 154,734,417 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரி மானியம் ரூபா 198,623,943 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

முன்னை ஆண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் 2.84:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது 1.92:1 ஆகக் குறைவடைநதிருந்தது. விரைவுச் சொத்து விகிதம் 1.29:1 முதல் 1.58:1 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வெளிநாட்டு பிக்கு மாணவர்கள் 25 பேர்கள் தமக்கு விடுதி வசதிகள் வழங்கும் எதிர்பார்ப்பில் ரூபா 80,843,406 செலவில் மாணவர் விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு பிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு தவறியமை மற்றும் இந்த மாணவர் விடுதியினை நிர்மாணிப்பதற்கு சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமையின் காரணமாக இந்த விடுதியின் மொத்த அறைகளின் இயலளவில் 56 சதவீதம் விளைவற்ற நிலையில் காணப்பட்டது. | வெளிநாட்டு மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு கவர்ந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றது. | மாணவர் விடுதியினை முழுமையாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 மே 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டிய ரூபா 08 மில்லியன் பெறுமதி உடைய வள முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப முறைமையின் (ERP) வேலைகள் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாது இருந்தமையால் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் செலவிடப்பட்டிருந்த ரூபா 4,000,000 தொகையில் எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழகம் தவறி இருந்தது. | 2025 ஒக்தோபர் 16 ஆந் திகதி இந்த முறைமையை பகுப்பாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றத்தின் தகவல் உத்தியோகத்தரினால் அறிக்கையிடப்பட்டிருந்த வழுக்கள் உரிய நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அந்த வழுக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், தற்போது ERP முறைமையின் மூலம் அநேகமான பிரிவுகளின் கடமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அதன் போது ஏற்படுகின்ற ஏதாவது இனங்காணப்பட்ட வழுக்கள் தொடர்பான அறிக்கையும் உரிய நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் அந்த நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படுவதாகவும் உரிய நிறுவனத்தின் முகவர்களினால் வாய் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தின் கீழான வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |